1984 பிப்ரவரி 17]

(ஆ) ஆம் எனில், கூட்டுறவு வீடு கட்டும் சங்கம் வேறு இடத்தில் டவுன்ஹால் கட்டிக் கொடுக்க முன்வருமா?

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு நகரில் இப்பொழுது இருக்கிற அந்த இடம் பாரத ஸ்டேட் வங்கிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. செங்கற்பட்டு கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்திற்கு வேதாசலம் நகரில் நகர்மன்றம் அமைக்க வேறு தகுதியான இடமில்லை. அளகேசன் நகர் மற்றும் அண்ணா நகரில் சங்கத்திற்குச் சொந்தமான பொதுக் காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 76 சென்ட் 201 சதுர அடி பரப்பளவு உள்ள மனைகள் உள்ளன. இந்த மனைகளில் நகர் மன்றம் கட்டித்தருகிற அளவுக்குச் சங்கத்திடம் போதிய நிதி வசதி இல்லை.

தஞ்சையிலிருந்த வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக அலுவலகம்

17—(*வினா எண் 19191) திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையில் இருந்த வீட்டுவசதி வாரியத்தின் நிர்வாக அலுவலகம் திருச்சி பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில் தஞ்சையில் மீண்டும் பிரிவு அலுவலகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: (அ) மற்றும் (ஆ) தஞ்சையிலிருந்த வீட்டுவசதி அலுவலகம் வேலையின்மை காரணமாக மாற்றப்பட்டிருக்கிறது. வேலைகள் வருகிற நேரத்தில் நிச்சயமாக அந்த அலுவலகம் செயல்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: இப்பொழுது புதுக்கோட்டை மாவட்டம் மதுரை வீட்டு வசதிப் பிரிவோடும் தஞ்சை திருச்சியோடும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. புதிதாக மாவட்டத் தலைநகரங்களை மாற்ற வசதிகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே, தஞ்சையிலே மீண்டும் அந்த அலுவலகத்தை ஏற்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த வரை எங்கு பணிகள் இருக்கின்றனவோ அந்தப் பணிகளுக்கு ஏற்ப அலுவலகங்கள் அமைப்பது என்பதை முறையாக வைத்

இருக்கிறோம். பணிகள் எடுப்பதிலே பல்வேறு இடங்களிலே தாமதங்கள் ஏற்படுகின்றன. தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு இடங்களிலே பணிகள் மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கும்போது பல்வேறு நிலைகளிலே தடுக்கப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய வேலைகளை உருவாக்கித் தருவார்களானால் அந்த வேலைகளை எடுக்கும்போது அங்கு அலுவலகம் திறக்கப்படும்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கே வேலை இருக்கிறபொழுது அலுவலகம் இருந்தது. வேலை இல்லாததால்தான் அலுவலகம் போய் விட்டது என்று சொன்னார்கள். எனவே, அதிகமான வேலைகளை எடுத்துக்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேலைகளைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களிலே கோட்புகளின் அடிப்படையில் அதற்கான ஆய்வுகள் நடத்தப்பட்டு, எடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேலைகளை எடுக்க வேண்டுமென்ற முயற்சி எடுக்கிற நேரத்தில் பல்வேறு இடங்களில் விளைநிலமாக இருப்பதால், இடத்தைத் தேர்ந்தெடுப்பது சிரமமாக இருக்கிறது. எனவே, தேர்ந்தெடுக்கப்படுகிற இடங்களில் வீடுகள் கட்டப்படுவதில்லை. எனவே, அப்படிப்பட்ட நிலையில், வேலைகள் இன்மையால், அலுவலகம் மாற்றப் பட்டுள்ளது. வேலைகள் எடுக்கப்படுமானால் நிச்சயமாக அலுவலகம் உருவாகும்.

திரு. பொ. உத்திராபதி: துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கடுமையாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் நமது அமைச்சர் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்து, பார்த்து விட்டு, திருச்சிக்குச் சென்று வீட்டு வசதி வாரிய அதிகாரிகளை அழைத்துப் பேசி ஒரு அறிவிப்பு கொடுத்தார்கள். அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்துப் பேசிய அடிப்படையில், தஞ்சையில் பள்ளப் பகுதியில் உள்ளவர்களுக்கு மேட்டுப் பகுதியில் வீடு கட்டிக் கொடுக்க, ஒரு திட்டத்தை உருவாக்க, தஞ்சை மாவட்டத்திலே ஒரு அலுவலகம் வைத்து, பாதிக்கப் பட்டவர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலமாக, இடத்தை எப்படியாகிலும் எடுத்து, வீடு கட்டிக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் கேட்டிருக்கிற கேள்வியைப் பொறுத்தவரை இப்பொழுது பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையிலே இருக்கிற மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால், பாதிக்கப்பட்டிருக்கிற பெரும்பகுதி மக்கள் தாழ்ந்த இடங்களிலே குடிசைகளிலே.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வாழ்கிறவர்கள். அந்தத் தாழ்ந்த இடத்திலே, குடிசையிலே இருக்கிற மக்களை, மேட்டுப் பகுதிக்கு மாற்றுவது என்பது ஒரு முக்கியமான பணி. இதற்காக குடிசை மாற்று வாரியம் சார்பிலும், வீட்டு வசதி வாரியம் சார்பிலும் திட்டம் தீட்டப் பட்டிருக்கிறது. வீட்டு வசதி வாரியம் பல்வேறு தரப்பினர் களுக்கும் வீடு கட்டித் தருகிறது. ஆனால் இன்றைக்கு ரூ. 3 கோடி அளவுக்கு, தனியாக இப்பொழுது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கிற பகுதியினர்களுக்கு வீடுகள் கட்டுவதற் காகக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே, குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலே, ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

1982–1983 ஜூன் வரை குடிசைமாற்று வாரியம் மூலம் கட்டப்பட்ட வீடுகள்.

18—(* வினா எண் 20920) திரு. என். வரதராஜன்: மாண்புமிகு சுற்றுப்புற சூழல் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசை மாற்று வாரியத்தில் 1982 முதல் 1983 ஜூன் வரை கட்டப்பட்ட வீடுகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1982–83 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் 2,450 வீடுகள் குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ளன.

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசை மாற்று வாரியத்தின் வீடுகள் சென்னை மாநகரத்திற்கு மட்டும்தான் கட்டப்படு கிறது. தமிழ் நாட்டினுடைய பிற நகரங்களிலும், கிராமப் பகுதிகளிலும் இந்தத் துறையின் மூலம் வீடுகளைக் கட்டு வதற்கு அரசு திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இந்த குடிசை மாற்று வாரியம் என்பது சென்னை மாநகரத்திற்கு மட்டும் இருந்த நிலையை மாற்றி தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களிலும் இருக்கிற குடிசைகளை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே 16 இடங்களுக்கு அது விரிவாக்கப்பட்டிருக்கிறது. அந்த இடங்களில் இருக்கிற குடிசை களை மாற்றுவதற்கான வேலைகளை குடிசை மாற்று வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS